**இன்றைய இறைவார்த்தை:**
செப்பானியா 2: 3, 3:12-13
திருப்பாடல் 146: 6-10
1 கொரிந்தியர் 1: 26-31
மத்தேயு 5: 1-12

செப்பானியா காட்சி நற்பண்புகளின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டு பகிரப்பட்ட ஒன்றாகும். மேலும் இதன் நிறைவை நாம் பேறுபெற்றோரின் குணநலன்ளில் காண்கிறோம். இயேசு இறைவாக்கினரின் காட்சியை நிறைவுசெய்கிறார். மேலும் கிறிஸ்துவை மையமாகக் கொண்ட ஒரு திருஅவையை உருவாக்க எவ்வாறு நாம் உதவமுடியும் என்பது குறித்து, அதிக நுட்பமான கருத்துகளைத் தருகிறார்.

**ஏழையரின் உள்ளம் கொண்ட திருஅவை பேறுபெற்றது** - திருஅவையாக நாம் கடவுளை முழுமையாக சார்ந்திருப்பதை உணர்கிறோம். கடவுளுக்கு முன்பாக நம்மையே வெறுமையாக்கி, எல்லாவற்றிலும் குறிப்பாக அனைத்து உறுப்பினர்களுக்கும் இடையிலான உறவை கட்டியெழுப்புவதிலும் கிறிஸ்துவின் உடலை வலுப்படுத்துவதிலும் அவருடைய அருளைப் பெற தயாராய் இருத்தல்.

**துயருறும் திருஅவை பேறுபெற்றது**. நாம் நமது காயங்களை மறைத்துக்கொள்ளாமல், நற்கருணை மற்றும் ஒப்புரவு என்னும் அருளடையாளங்களின் வழியாக குணப்படுத்தும் ஆண்டவரிடம் நம்முடைய பாதிப்புகளையும், உடைந்த உள்ளத்தையும் திறந்து காட்டுகிறோம். இதனால், காயமடைந்த நம்முடைய உலகிற்கு நாம் ஆறுதலின் ஆதாரமாகத் திகழ்கிறோம்.

**கனிவுள்ள திருஅவை பேறுபெற்றது** - சேவை செய்வதன்மூலம் செல்வாக்கைத் தேடுகிறோம். கனிவின் கட்டுப்பாட்டில் மென்மையான வலிமையுடன் அதிகாரத்தைப் பயன்படுத்துகிறோம்.

**நீதி நிலைநாட்டும் வேட்கை கொண்ட திருஅவை பேறுபெற்றது** - நாம் ஒருபோதும் மேலோட்டமான நம்பிக்கை அல்லது மனநிறைவில் நிறைவடையக்கூடாது. மாறாக ஒரு புனிதமான தாகத்துடன் அனைத்து சூழ்நிலைகளிலும் கோரும், கடவுளின் நீதியைத் தேடுகிறோம்.

**இரக்கமுடைய திருஅவை பேறுபெற்றது** - திருஅவை அருள் மற்றும் இரக்கத்தின் சரணாலயம். ஒரு இரக்கமுள்ள திருஅவை மறுவாய்ப்புகளின் கலாச்சாரத்தை உருவாக்குகிறது. அங்கு ஆன்மாக்கள் கிறிஸ்துவுக்காக வெற்றிகொள்ளப்படுகின்றன.

**தூய்மையான உள்ளத்தைக் கொண்ட திருஅவை பேறுபெற்றது** - ஆவியிலும் உண்மையிலும் கடவுளை ஆராதிக்க முயலும் திருஅவை, போலியான நம்பிக்கை தனிப்பட்ட நிகழ்ச்சிகள், பிளவுபட்ட நம்பிக்கைகளுக்கு அப்பால், திருஅவை ஒன்றித்திருக்கும்போது கடவுள் வெளிப்படையாகக் காணப்படுகிறார்.

**அமைதி ஏற்படுத்தும் திருஅவை பேறுபெற்றது** - அமைதியை ஏற்படுத்தும் இளவரசரைப் போல ஒப்புரவு ஏற்படுத்தி, அமைதிக்கும் ஒற்றுமைக்கும் பாலம் அமைத்து துணிவோடு ஒன்றிணைக்க முயற்சிக்கும் ஒரு திருஅவை

**துன்புறுத்தப்படும் திருஅவை பேறுபெற்றது** - கிறிஸ்துவின் துன்பங்களில் பங்குகொள்வதும், நற்செய்திக்கு நம்பிக்கையோடு இருக்கும் துன்புறுத்தலை எதிர்கொண்டு நிற்கும் துணிவுள்ள திருஅவை

எனவே, திருஅவை, **பேறுபெற்றோரின் திருஅவை**. கிறிஸ்துவின் திரு உடலான திருஅவை, நாம் உண்மையிலேயே கடவுளின் அருளைக் காணக்கூடிய வெளிப்பாடாக இருப்போம். ✣

> நற்கருணைக் கொண்டாட்டத்தில் கூடும் திருஅவை சமூக உறவுகள், வரவேற்பு, தேர்ந்துதெளிதல், மற்றும் தூதுரைப்பணி ஆகியவற்றின் சலுகை பெற்ற இடமாகும்.
> இறுதி ஆவணம் எண்:117

INTERNAL CIRCULATION ONLY
BUL 05/2026
**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org

NEWBEC
NEW WAY OF BEING CHURCH | பொதுக்காலம் ஆண்டின் 4 ஆம் ஞாயிறு | 01 பிப்ரவரி 2026

உலக சமயங்களுக்கிடையிலான நல்லிணக்க வாரம்

**ஒன்றித்தப் பயணம் மற்றும் இறைவாக்கு உரைக்கும் திருஅவையை நோக்கி ஒன்றித்து நடத்தல்**

*மறைத்தூதுரைக்கும் சீடத்துவத்திற்கான மக்கள்*

மாதாந்திர நோக்கம்: திருஅவை: உள்ளடக்கிய தன்மையை வளர்த்தல்

# பேறுபெற்றோரின் திருஅவை

ஒரு திருஅவையாக முன்னேற இந்த பிப்ரவரி மாதத்தில் நற்செய்தியில் உள்ள பேறுபெற்றோரின் குணநலன்கள் நமக்கு உத்வேகம் அளிக்கின்றன. அவற்றுடன் நாம் இணைவதற்கு உதவும் வகையில் இன்றைய வாசகங்களை நாம் வாசிப்போம். எந்த வகையான எஞ்சியுள்ள மக்களை ஒன்றுசேர்க்க இறைவன் விரும்புகிறார் என்பதை விவரிப்பதன்மூலம் நமக்கு ஒரு காட்சிமேடையை இறைவாக்கினர் செப்பானியா அமைக்கிறார் கடவுளின் சட்டத்திற்குக் கீழ்ப்படிய முற்படும்போது, நீதிமான்களும் தாழ்ச்சியான உள்ளத்தினரும் கொண்ட சமூகத்தைக் காட்டுகிறது.

